**செய்தி வெளியீடு எண்: 658** **நாள்:12.09.2020**

**<u>தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டண நிர்ணயக் குழுவின் அறிக்கையை குழுத் தலைவர் நீதியரசர் கே.சந்துரு அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தல் குறித்த செய்தி வெளியீடு.</u>**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் இணைப்பு தனியார் வேளாண்மைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் பொருட்டு, மாண்புமிகு நீதியரசர் திரு.கே.சந்துரு, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களின் தலைமையில் கல்விக் கட்டணக் குழுவை அரசு நியமித்தது. இதனைத் தொடர்ந்து, இணைப்பு வேளாண்மைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 2020–2021ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விக் கட்டணத்தை பரிந்துரை செய்து மாண்புமிகு நீதியரசர் திரு.கே.சந்துரு அவர்கள் தம்முடைய அறிக்கையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களிடம் இன்று (12.9.2020) நேரில் சமர்ப்பித்தார்.

இந்நிகழ்வின் போது, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் என்.சுப்பையன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**